நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 149 /2025

## P.W. 6 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | ராஜமுத்து(எ) நாச்சிமுத்து |
| தந்தை / கணவர் பெயர் | : | முருகன் |
| கிராமம் | : | நங்கவள்ளி |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW 6 |
| வயது | : | 25 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், ஜனவரி மாதம், 08–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் . அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 11.43AM.

1. நான் தற்போது நங்கவள்ளியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஒரு வருடத்திற்கு முன்பு 29ம்தேதி வீரக்கல் முனியப்பன் கோவில் அருகே விபத்து நடந்ததாக சொன்னார்கள். அது சம்பந்தமாக 30ம் தேதி நானும், பிரவின்குமார் என்பவரும்

விபத்து நடந்த இடத்தில் நின்று பேசி கொண்டிருந்தோம். அப்போது அங்கிருந்த போலீசார் படம் வரைந்து எழுதி என்னிடமும்,பிரவினிடமும் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். அதில் விவரங்கள் எனக்கு தெரியாது. ( **பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலீசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

1. 30.10.2024ம் தேதி நானும், பிரவினும் விபத்து நடந்த இடத்தில் மாலை 5.00 மணிக்கு இருந்தோம் என்றால் சரிதான். ஆட்டோவில் வந்தவர் பைக்கின் மீது மோதி விபத்து ஏற்படுத்தினார் என்று போலீசார் என்னிடம் சொன்னார்கள். போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கியபோது விபத்து நடந்த இடத்தில் இருந்த இடங்களை குறித்து கொண்டு எங்களிடம் படித்து காண்பித்த பிறகு தான் நாங்கள் கையெழுத்து செய்தோம் என்றால் சரியல்ல. போலீசார் கேட்டதற்காக கையெழுத்து செய்தேன். எதிரிக்காக பரிந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நானும், அ.சா.5 பிரவின்குமார் என்பவரும் ஒன்றாகத்தான் கையெழுத்து செய்தோம். அ.சா.5. பிரவின்குமார் நான் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்ததாக சொல்லி இருந்தால் அது தவறு.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–11.53AM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**